24th January 1964]

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** ஈரோடில் அரெஸ்டு ஆன ஸப்-இன்ஸ்பெக்டர் அர்ஜுனன் என்பவர் 15 வருஷ காலம் ஸர்வீஸில் இருந்ததாக தெரியவருகிறது. இந்த 15 வருஷ காலத்தில் தன்னால் இயன்ற வரைக்கும் என்னென்ன செய்யவேண்டுமோ, அத்தனையும் செய்து பார்த்து, மதுவிலக்குச் சட்டத்தை அமுல் நடத்த முடியாது, அது கண்டிப்பாக தோல்வியுறும் என்று அறிந்த காரணத்தினாலேதான் இந்தப் புரட்சியை அவர் செய்தார் என்பதைச் சர்க்கார் உணருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இப்பேர்ப்பட்ட கேள்விக்கு நான் பதில் சொல்லாமல் இருந்தால் நல்லது என்று நினைக்கிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** மது விலக்குக் கொள்கையைப் பற்றியோ அல்லது மது விலக்கு நடைமுறையைப் பற்றியோ யாருக்கும் என்ன கருத்து வைத்திருப்பதற்கும் உரிமை உண்டு. அதைப் பற்றிச் சொல்லுவதற்கு உரிமை உண்டு. ஆனால், இந்த ஸப்-இன்ஸ்பெக்டருடைய நடத்தையைப் பற்றி நாம் இப்பொழுது ஆராயவேண்டியிருக்கிறது. இவர்மீது ஏற்கனவே சில குற்றச்சாட்டுகள் இருந்து, அவரை வேலையிலிருந்து நீக்கவேண்டும் என்று அவருக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவை எத்தகைய குற்றச்சாட்டுகள், விவரம் என்ன என்பதை அறிவிக்கமுடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : He was impertinent, disobedient and misbehaving. அவர் அப்பேர்ப்பட்ட அடங்காப்பிடாரி. இன்ஸ்பக்டர் சொல்லுவதை கேட்காது செய்திருக்கிறார்கள். அதனால் அவர் மீது சார்ஜ் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**சாக்கடை நீரைப் பிரித்தல்**

* 54 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ரசாயன முறைப்படி சாக்கடை நீரை வேறாகவும், கழிவைத் தனியாகவும் பிரிக்க ஏதாவது திட்டம் உண்டா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Yes, on an experimental basis.

**எர்ஸ்கின் மருத்துவ மனை (மதுரை)**

* 81 கேள்வி—திரு. கரு. சீமைச்சாமி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரையில் உள்ள அரசாங்க எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் படுக்கை வசதி போதாததால் நோயாளிகளை தரையில் படுக்க வைத்திருப்பது உண்மையா ?